**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண். 711/2023</u>**

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05–ம் நாள் செவ்வாய்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | கோவிந்தசாமி | தொழில் |
| த/பெ | | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**1.** என் பெயருக்கு தாவா சொத்தை எழுதிக் கொடுப்பதாக கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. அறிவிப்பில் கட்சிக்காரர்களுக்கு தாவா சொத்தை எழுதிக் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடட சொல்லில் கட்சிக்காரர்கள் என்பவர்கள் யார் என்று கேட்டால் என் பெயரில் தான் கிரயம் செய்து கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தம் ஏற்படுத்தினோம். அவ்வாறு தான் கிரைய உடன்படிக்கையில் எழுதப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறுதான் உள்ளது. கிரைய உடன்படிக்கையில் என் பெயரில் மட்டும் கிரயம் ஏற்படுத்த வேண்டும் என்று குறிப்பிடவில்லை என்றாலும் நான் கிரைய ஒப்பந்த ஆவணத்தை பார்க்காததால் தான் மேற்படி விபரம் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**2.** தாவா கிரைய ஒப்பந்தத்தை என்னுடைய பங்கை நிறைவேற்ற நான் உரிய தொகையை கையில் வைத்திருந்தேன் என்பதை காட்ட ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் பணம் கைவசம் வைத்திருந்தேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில்

பிரதிவாதியிடம் பிற அடையாள அட்டைகள் கேட்டதாக நான் குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்படாததால் இந்த வழக்கே சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 250/2021 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கடனுறுதி சீட்டில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை. குமாரசாமி மற்றும் குப்புசாமி ஆகியோர் பிரதிவாதியிடம் ஏற்படுத்திக்கொண்ட பிற ஆவணங்களில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை.

3. தாவா கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட தேதியில் தாவா சொத்தின் மதிப்பு 40 லட்சம் என்றாலும் அதை நான் குறிப்பிட்ட குறைந்த விலைக்கு உடன்படிக்கை ஏற்படுத்த மாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியுடைய அலைபேசி எண் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள கிரைய உடன்படிக்கை பத்திரம் வழக்கோடு தொடர்புடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் கோரப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.08.05 19:36:07 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.